# DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: MC.7/2022**

**RW : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அய்யாவு | Caste | : |
| Father 's Name / Husband Name | : கந்தசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**(12.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது எஸ்.வலையப்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு 3 மகன்கள் உள்ளனர். 3 மகன்களுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எனக்கு 2 வது மகன் என்றால் சரிதான். எனது மகனின் திருமணம் மற்றும் அதன் பிறகு நடந்த எல்லா விபரங்களும் தெரியும் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் கடைசியில் உள்ள 3 வரிகளில் மனுதாரர் "அணிந்து வந்ததாக கூறப்படும் நகைகள் மற்றும் பண்டபாத்திரங்கள் அனைத்தும் அருப்புக்கோட்டை மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்து மேற்படி புகாரின் அடிப்படையில் பெற்று சென்றுவிட்டார் என்று நான் எனது

நிரூபண வாக்குமூலத்தில் கூறியிருக்கிறேனா என்றால் இல்லை. மனுதாரர் உஷா திருமணத்தின் போது எத்தனை பவுன் நகை போட்டு வந்தார் என்றால் நகையை பற்றி பேசவில்லை. அந்த பெண் தான் நகையை போட்டுவந்தது. கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட தகராறில் அந்த பெண் நகை மற்றும் பொருட்களை எடுத்துச்சென்று விட்டது. எனது மகன் எனது மருமகளின் நகையை வைத்து மோசடி தொழில் வைத்து ஏமாந்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு சொந்தமாக நிலம் உள்ளதா என்றால் எனது மனைவி பெயரில் உள்ளது. எனது குடும்பத்திற்கு மொத்தம் 2 வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. நாங்கள் கட்டிய வீட்டில் தான் நானும் எனது மகனும் உள்ளோம் என்றால் சரிதான்.

எனது புதுவீட்டு மாடியில் எதிர்மனுதாரரும் அவரது மனைவியும் குடியிருந்த போது மூத்த மகனின் மனைவியுடன் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரியல்ல அந்த பழக்கத்தின் அடிப்படையில் தான் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் பிரச்சினை ஏற்பட்டது என்றால் சரியல்ல. 05.03.2022ம் தேதி கணவன் மனைவிக்கும் இடையே பிரச்சினை வந்தது என்றால் தெரியாது. எதிர்மனுதாரரோடு மனுதாரர் அடிக்கடி சண்டை போட்டு அவது தாயார் வீட்டிற்கு சென்றுவிடுவார். எதிர்மனுதாரர் மனுதாரரை சமாதானம் பேசி அழைத்துவர அவரது வீட்டிற்கு செல்லும் போது அங்கு அவரது பெற்றோரும் மனுதாரரும் அசிங்கமாக பேசி அவமானப்படுத்தினார்கள் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. கடந்த ஒரு வருடங்களுக்கு முன்பு வரை எனது மகன் எதிர்மனுதாரர் ஜியோ நிறுவனத்தில் பொறியாளராக வேலை பார்த்து மாதம் ரூ.30,000/– பெற்று வருகிறார். எனக்கு உடல் நிலை சரியில்லாததால் அவன் வேலையை விட்டுவிட்டு என்னை பராமரித்து வருகிறார். எனது நிருபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் கம்பெனியில் ஆட்கள் குறைப்பு காரணமாக வேலையை விட்டு நின்று விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போதும் எதிர்மனுதாரர் அதே கம்பெனியில் தான் வேலை பார்த்து மாதம் 60,000/–பெற்று வருகிறார் என்றால் சரியல்ல. எனது மகன் வேலையில்லாத நேரத்தில் 7 லட்சம் செலவு செய்து எனக்கு மருத்துவம்

பார்த்துள்ளார். எனது மகன் வேலையில் இல்லை என்றால் இவ்வளவு செலவு செய்ய இயலாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது மனைவியை பராமரிக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.